## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மக நெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முந்தைய ஆண்டு சீராக்கங்கள் உரிமை மாற்றங்களின் கூற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் , முந்தைய ஆண்டுடன் தொடர்புடைய ரூபா.325 மில்லியன் நிறுத்தி வைத்தல் இலாபம் | உடன்பட்டுக் கொண்டோம்.<br><br>பிழைகளைச் சரிசெய்து, எதிர்கால அறிக்கைகளில் போதுமான வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள | பிழையை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் சரியான வெளிப்படுத்தல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பேரேட்டு கணக்கில் சரிசெய்யப்பட்டது. மேலும், மேற்படி சீராக்கம் தொடர்பான சான்றுகள் மற்றும் விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்பார்க்கிறோம். | முன்வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கட்டுப்பாட்டு கணக்குகளை பராமரிக்காமல் சுமார் 6645 கணக்குகளை பொது பேரேட்டில் கம்பனி பராமரித்து வந்தமை அவதானிக்கப்பட்டது.<br><br>மேலும் நிறுவனம் கணக்குக் குறியீட்டை வழங்காமல் 496 பேரேட்டு கணக்குகளை பராமரித்து வந்ததைக் காண முடிந்தது. | உடன்பட்டுக் கொண்டோம்.<br><br>தற்போது கம்பனியில் பயன்படுத்தப்படும் கணக்கியல் மென்பொருள் கட்டுமானத் துறையின் தன்மைக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட அமைப்பு இல்லை. | பொதுப் பேரேட்டில் கணக்குகளை உருவாக்கும் முன் முறையான அதிகாரம் மற்றும் ஒலிக் கட்டுப்பாடு செயல்படுத்தப்பட வேண்டும் |

### 1.5.2 சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஸ்) இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை

| | உரிய நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | SME களுக்கான SLFRS இன் பிரிவு 4.4 இன் பிரகாரம், 8 வாகனங்கள் தொடர்பான ரூபா 6 மில்லியன் தொகையான ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய குத்தகைப் பொறுப்பானது நிதி கூற்றில் நடைமுறை பொறுப்பு என வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டுக் கொண்டோம்.<br><br>எதிர்கால அறிக்கைகளில் வெளிப்படுத்லினை சரிசெய்வதற்கு நாங்கள் எதிர்பார்க்கிறோம். | SME களுக்கான SLFRS இன் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | SME களுக்கான SLFRS இன் பிரிவு 18.18 க்கு முரணாக கம்பனி ரூபா 6.8 மில்லியன் பெறுமதியான மென்பொருளினை கட்புலனாகா சொத்துக்களின் பிரிவாக அங்கீகரிக்கப்படுவதற்குப் பதிலாக கணனி முறைமைகள் பிரிவின் கீழ் அடையாளம் கண்டிருந்தது மற்றும் அதன் பிரகாரம் தேய்வு செய்திருந்தது. | உடன்பட்டுக் கொண்டோம்.<br><br>எதிர்காலத்தில், முகாமையானது அருவ சொத்துக்களுக்காக ஒரு புதிய வகைப்படுத்தலினை உருவாக்கி புதிய வகுப்பின் கீழ் மென்பொருள் தொடர்பான பெறுகைகளை பதிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. | SME களுக்கான SLFRS இன் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும் |
| (இ) | SME களுக்கான SLFRS இன் பிரிவு 20.9 க்கு முரணாக, கம்பனி ரூபா.55 மில்லியன் பெறுமதியான குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களை நிதிக் கூற்றுக்களில் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் பிரிவின் கீழ் அங்கீகரித்திருந்தது. | உடன்பட்டுக் கொண்டோம்.<br><br>எதிர்கால அறிக்கைகளில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துகளின் சரியான அளவீட்டினை செய்வதற்கு எதிர்பார்க்கிறோம். | SME களுக்கான SLFRS அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா.498 மில்லியன் தொகையான நடை பெற்றுக் கொண்டிருக்கும் 04 சட்ட வழக்குகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புகள் குறித்து SME களுக்கான SLFRS இன் 21.15 மற்றும் 21.16 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி எந்த வெளிப்பாடுத்தலினையும் செய்திருக்கவில்லை. | உடன்பட்டுக் கொண்டோம்.<br><br>எதிர்கால அறிக்கைகளில் தொடர்புடைய விவரங்களை வெளியிப்படுத்துவதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம். | SME களுக்கான SLFRS இன் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும் |
| (உ) | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நிர்மாணத்ததுடன் தொடர்புடைய வருமானம் ரூபா.21,281 மில்லியன் தொகையினை SME களுக்கான SLFRS இன் பிரிவு 23.17 இன் பிரகாரம் கம்பனி அதன் வருமானத்தினை பூர்த்தி செய்யும் கட்டத்தில் அங்கீகரித்திருக்கவில்லை. | உடன்படவில்லை.<br>கம்பனியின் நிர்மாண ஒப்பந்த வருமானத்தினுள் வெவ்வேறு இலாப வரம்புகள் (5%, 10%) மற்றும் நேரடி நிர்மாண ஒப்பந்தங்கள் மூலம் கிடைக்கும் வருமானம் என்பன சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, நிர்மாணிப்பு செலவு மற்றும் அதன் கட்டங்களினை சரிபார்க்க முடியவில்லை. | SME களுக்கான SLFRS இன் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும் |
| (ஊ) | SME களுக்கான SLFRS இன் 29.8 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் பிற்போடப்பட்ட வரிச் சொத்து அல்லது பொறுப்பினை கம்பனி அங்கீகரிக்கவில்லை. | உடன்பட்டுக் கொண்டோம்.<br><br>எதிர்கால அறிக்கைகளில் பிற்போடப்பட்ட வரியினை அங்கீகரிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். | SME களுக்கான SLFRS இன் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும் |
| (எ) | SME களுக்கான SLFRS இன் பிரிவு 33 இன் பிரகாரம் நிதி கூற்றுக்களில் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உடன்படவில்லை.<br>தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள குறிப்பு எண். 13.1 இல் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன, மேலும் நிதி நிலைமை கூற்றுடன் மொத்தங்கள் இணைக்கப்பட்டுள்ளன. | SME களுக்கான SLFRS இன் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும் |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் ஆரம்ப இருப்பு நிதி கூற்றுக்களின் பிரகாரம் ரூபா. 1,081 மில்லியன் ஆகும் மற்றும் நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா. 984 மில்லியன். இவ்வாறு, ரூபா. 96 மில்லியன் வேறுபாடொன்று காணப்பட்டது. | உடன்பட்டுக் கொண்டோம்.<br><br>எதிர்கால அறிக்கைகளில் சொத்துப் பதிவேடு வழுவினை சரிசெய்வதற்கு எதிர்பார்க்கிறோம். | வேறுபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இந்த ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 23 மில்லியன் தொகையான ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் நிதி கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படவில்லை. இதன் விளைவாக, நடைமுறை அல்லாத சொத்துக்கள் நிதி கூற்றுக்களில் அந்தத் தொகையால் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. | உடன்படவில்லை.<br><br>நிலையான சொத்துக்களுக்கு பண அடிப்படையில் அல்லது குத்தகை அடிப்படையில் பணம் செலுத்துவது எமது கணக்கீட்டு முறைமை மூலம் மேற்கொள்ளப்படுகிறது. எனவே, கொடுப்பனவு பதிவொன்றினை தவறவிடுவது இடம்பெற முடியாது | நிதி கூற்றுக்களுக்கு சரியான தொகைகள் எடுக்கப்படல் வேண்டும் மற்றும் வேறுபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களை அகற்றுவது தொடர்பான அதன் கிரய பெறுமதியை விட ரூபா. 23 மில்லியன் தொகைக்கு அதிகமான திரண்ட தேய்மானத்தினை கம்பனி அங்கீகரித்திருந்தது. | உடன்படவில்லை.<br><br>திரட்டப்பட்ட தேய்மானம் சொத்தின் பெறுமதியினை விட அதிகமாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. | நிதிக் கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும் |
| (ஈ) | கம்பனி, செயற்திட்ட ரீதியான நிர்மாண செலவினை செலவு ஏற்படும் நேரத்தில் அங்கீகரித்திரந்தது மற்றும் செயற்திட்டத்திற்கு சான்றளிக்கப்படாத போது மீண்டும் குறை வேலை நிர்மாணப் பணிக்கு மீண்டும் மாற்றல் செய்யப்பட்டது. அதன் பிரகாரம், செலவானது கம்பனியினால் ஒரு சொத்தாக கருதப்பட்டது. இதன் விளைவாக 2021 திசம்பர் 31 இல் உள்ளவாறு தற்போதைய சொத்துக்கள் மற்றும் இலாபம் ரூபா.853 மில்லியனால் மிகையாக குறிப்பிப்பட்டடிருந்தது. | உடன்படவில்லை. நிறைவு கட்டத்தை அங்கீகரிக்காத வரையிலும் ஒரே நேரத்தில் செய்யப்படும் துணை ஒப்பந்த வேலைகளின் வருமானம் மற்றும் செலவுகள் அவை எழும் போதே பதிவு செய்யப்படும். | ஏற்படும் செலவானது தனி சொத்துக்களாக நிதி கூற்றுக்களின் கீழ் அங்கீகரிக்கப்படக்கூடாது. |
| (உ) | கம்பனியின் நிதி கூற்றுக்களின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற வேண்டிய மீதி மற்றும் செலுத்த வேண்டிய தொகை முறையே ரூபா. 5,786.94 மில்லியன் மற்றும் ரூபா. 6,857.93 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி கூற்றுக்களின் பிரகாரம் உரிய நிலுவைகள் முறையே ரூபா. 8,030.04 மில்லியன் மற்றும் ரூபா. 6,016.56 மில்லியன் ஆகும். வேறுபாடுகள் முறையே ரூபா. 2,243.10 மில்லியன் மற்றும் ரூபா.841.37 மில்லியன் தொகையாக அவதானிக்கப்பட்டதுடன், இணக்க கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டுக் கொண்டோம்.<br>வழுக்களை சரிசெய்து, எதிர்கால அறிக்கைகளில் போதுமான வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளுவதற்கு எதிர்பார்க்கிறோம் | வேறுபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) ரூபா.128.8 மில்லியன் மற்றும் தேச கட்டுமான வரி (NBT) ரூபா. 2.9 மில்லியன் தொகைகள் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் மறை பெறுமதிகளாக அங்கீகரிக்கப்பட்டது. எனவே, ஏனைய செலுத்த வேண்டியவைகள் நிதி கூற்றுக்களில் அந்தந்நத தொகையினால் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. | உடன்பட்டுக் கொண்டோம். எதிர்கால அறிக்கைகளில் குறிப்புகளின் சமர்ப்பித்தலை மாற்றம் செய்வதற்கு எதிர்பார்க்கிறோம். | வேறுபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.5.4 தொங்கல் கணக்குகள்

| விடயம் | தொகை ரூபா. மில் | தொங்கல் காலப்பகுதி | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| வியாபார பெறவேண்டியவைகள் | 74.4 | 4 வருடங்கள் | உடன்பட்டுக் கொண்டோம்.<br>எதிர்கால அறிக்கைகளில் போதுமான வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நாங்கள் எதிர்பார்க்கிறோம். | தொங்கல் கணக்குகளை உடனடியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.5.5 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 மார்ச் 20 அன்று எடுக்கப்பட்ட CP/23/0394/608/033 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் , கம்பனியினை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சின் செயலாளர் உத்தரவிட்டார். எனினும் SME களுக்கான SLFRS இன் பிரிவு 3.9 இன் பிரகாரம் நிதி கூற்றில் இது வெளியிடப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டுக் கொண்டோம்.<br>எதிர்கால அறிக்கைகளில் கலைப்பு / தொடர்ந்தியங்கும் நிலையினை வெளிப்படுத்த நாங்கள் எதிர்பார்க்கிறோம். | தொடர்ந்தியங்கும் நிலைமை நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும் |

### 1.5.6 ஆவணச் சான்றுகள் கணக்காய்வுக்கு கிடைக்கப் பெறாமை

| | விடயம் | தொகை ரூபா. மில்லியன் | சாண்றுகள் கிடைக்கப் பெறாமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வாகன வாடகை | 532 | விரிவான அட்டவணை | ஒவ்வொரு வாடகைக் கணக்கிற்கும் கம்பனியிடம் நாளதுவரையாக்கல் செய்யப்பட்ட அட்டவணைகள் எதுவும் இல்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | வாடகை செலவுகள் | 13 | விரிவான அட்டவணை மற்றும் வாடகை ஒப்பந்தம் | ஒவ்வொரு வாடகைக் கணக்கிற்கும் கம்பனியிடம் நாளதுவரையாக்கல் செய்யப்பட்ட அட்டவணைகள் எதுவும் இல்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |
| (இ) | நிலையான சொத்துக்கள் அகற்றல் இலாபம் | 13 | விரிவான அட்டவணை | உடன்பட்டுக் கொண்டோம். கம்பனியிடம் நீண்ட காலமாக போதுமான அளவு நாளதுவரையாக்கல் செய்யப்பட்ட நிலையான சொத்துகள் பதிவேடு காணப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |
| (ஈ) | வருமான வரி | 92 | வருமான வரி கணிப்பீடு | உடன்பட்டுக் கொண்டோம். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |
| (உ) | சரக்கிருப்பு | 264 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை | உடன்பட்டுக் கொண்டோம். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |
| (ஊ) | குத்தகை பொறுப்பு | 13 | குத்தகை காலக்கழிவீட்டு அட்டவணை | உடன்பட்டுக் கொண்டோம். எதிர்கால கணக்காய்வுகளில் தேவையான அட்டவணைகளை சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |
| (எ) | துணை ஒப்பந்த செலவுகள் | 18,663 | விரிவான அட்டவணை | உடன்படவில்லை. கணக்காய்வு ஆரம்பித்த போது பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக, கணக்காய்வாளரினால் கோரப்பட்ட வடிவமைப்பின் பிரகாரம் கோரப்பட்ட அட்டவணைகளை வழங்க முடியவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஏ) | RDA இடமிருந்து பெற வேண்டிய சான்றுப்படுத்தப்பட்ட வேலைப் பட்டியல் | 2,358 | விரிவான அட்டவணைகள் | உடன்படவில்லை. கணக்காய்வு ஆரம்பித்த போது பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக, கணக்காய்வாளரினால் கோரப்பட்ட வடிவமைப்பின் பிரகாரம் கோரப்பட்ட அட்டவணைகளை வழங்க முடியவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |
| (ஐ) | பெற வேண்டிய பிடிகாசு | 3,341 | விரிவான அட்டவணைகள் | உடன்படவில்லை. கணக்காய்வு ஆரம்பித்த போது பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக, கணக்காய்வாளரினால் கோரப்பட்ட வடிவமைப்பின் பிரகாரம் கோரப்பட்ட அட்டவணைகளை வழங்க முடியவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |
| (ஒ) | RDA யிடமிருந்து பெறப்பட்ட முற்பணம் | 6,720 | விரிவான அட்டவணைகள் | உடன்படவில்லை. கணக்காய்வு ஆரம்பித்த போது பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக, கணக்காய்வாளரினால் கோரப்பட்ட வடிவமைப்பின் பிரகாரம் கோரப்பட்ட அட்டவணைகளை வழங்க முடியவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |
| (ஓ) | வியாபார பெற வேண்டியவைகள் | 4,349 | விரிவான அட்டவணைகள் | உடன்படவில்லை. கணக்காய்வு ஆரம்பித்த போது பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக, கணக்காய்வாளரினால் கோரப்பட்ட வடிவமைப்பின் பிரகாரம் கோரப்பட்ட அட்டவணைகளை வழங்க முடியவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |
| (ஔ) | ஒப்பந்த காரர்களுக்குசெலுத்தப்பட்ட முற்பணம் | 4,354 | முற்பண கொடுப்பனவு பதிவேடு | உடன்படவில்லை. கணக்காய்வு ஆரம்பித்த போது பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக, கணக்காய்வாளரினால் கோரப்பட்ட வடிவமைப்பின் பிரகாரம் கோரப்பட்ட அட்டவணைகளை வழங்க முடியவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |
| (க) | துணை ஒப்பந்ததாரர் மற்றும் ஏனைய வியாபார கடன்கொடுத்தோர் | 6,611 | விரிவான அட்டவணைகள் | உடன்படவில்லை. கணக்காய்வு ஆரம்பித்த போது பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக, கணக்காய்வாளரினால் கோரப்பட்ட வடிவமைப்பின் பிரகாரம் கோரப்பட்ட அட்டவணைகளை வழங்க முடியவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (கா) | வரியியல் | 96 | வரி கணிப்பீட்டு அட்டவணை | உடன்பட்டுக் கொண்டோம். எதிர்கால கணக்காய்வுகளில் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |
| (கி) | நுகரப்பட்ட பொருள் | 1,858 | குறித்த காலப்பகுதியின் போதான நுகரப்பட்ட பொருட்களின் நுகர்வு பதிவேடு | உடன்பட்டுக் கொண்டோம். நிதி சார்பான பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக, கணக்காய்வு ஆரம்பிக்கும் போது கணக்காய்வாளர்களிடம் சமர்ப்பிப்பதற்கு போதுமான சரக்கிருப்பு அறிக்கைகள் காணப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |
| (கீ) | பரீட்சை மீதியின் பிரகாரம் நிறுத்தி வைத்த இலாபம் | 612 | நிறுத்தி வைத்த இலாப சீராக்கங்களுக்கான இணக்கம் | உடன்பட்டுக் கொண்டோம். நிறுத்தி வைத்த இலாபங்களை சரிசெய்தல் மற்றும் போதுமான வெளிப்படுத்தல்களை சமர்ப்பிக்காமையினால் எங்களின் தவறுகளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |
| (கு) | குறை வேலை நிர்மாணிப்புக்கள் | 853 | விரிவான அட்டவணைகள் | உடன்படவில்லை. நிறைவு கட்டத்தை அங்கீகரிக்காத வரையிலும் ஒரே நேரத்தில் செய்யப்படும் துணை ஒப்பந்த வேலைகளின் வருமானம் மற்றும் செலவுகள் அவை எழும் போதே பதிவு செய்யப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ மற்றும் 7 ஆம் பந்தியுடன் உடன் இணங்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br><br>9.2 ஆம் பிரிவு | பொது முயற்சிகள் திணைக்களம், பொது திறைசேரியில் பதிவு செய்யப்பட்ட அமைப்பின் ஒழுங்கமைப்பு படம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | கருத்துரை பெறப்படவில்லை | பொது முயற்சிகள் சுற்றறிக்கையினை பின்பற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்<br>78 ஆம் பிரிவு | கம்பனியால் பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை | கருத்துரை பெறப்படவில்லை | கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாட்டிற்கு ஏற்ப செயல்படல் வேண்டும். |
| (இ) | 133 (1) ஆம் பிரிவு | கூட்டிணைக்கப்பட்டதில் இருந்து ஆண்டு பொதுக் கூட்டம் நடத்தப்பட்டிருக்கவில்லை | கருத்துரை பெறப்படவில்லை | கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாட்டிற்கு ஏற்ப செயல்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 634,734,765 இலாபமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா. 226,562,193 ஆக காணப்பட்டமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா. 861,296,958 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முக்கியமாக சான்றளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் மீதான வருமானத்தில் இருந்தான வருமானம் வருமானம் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கான காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| விடயம் | 2021 ரூபா. மில்லியன் | 2020 ரூபா. மில்லியன் | வேறுபாடு ரூபா. மில்லியன் | வேறுபாடுகளின் சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| வருமானம் | 22,131 | 6,949 | 15,182 | 218 |
| விற்பனைக் கிரயம் | 21,220 | 6,836 | 14,384 | 210 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 216.7 | 121.4 | 95.3 | 78 |
| நிர்வாக மற்றும் தாபன செலவுகள் | 455.6 | 332.1 | 123.5 | 37 |
| சந்தைப்படுத்தல் செலவுகள் | 2.3 | 53.4 | (51.1) | (96) |
| நிதி செலவு | 35 | 49.8 | (14.8) | (30) |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

| | 2021 | 2020 |
|---|---|---|
| நடைமுறை சொத்து விகிதம் | 1.23 | 1.4 |
| விரைவு சொத்து விகிதம் | 1.2 | 1.39 |
| மொத்த இலாப விகிதம்-சதவீதம் | 4 | 1.6 |
| நிகர இலாப விகிதம்-சதவீதம் | 2.86 | (3.2) |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கணத்தன்மையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சேம்பர் ஆ.்.ப் கன்ஸ்ட்ரக்ஷன் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் நேஷனல் அசோசியேஷன் ஆ.்.ப் கான்ட்ராக்டர்களுடன் கூட்டு முயற்சியில் கூட்டு சேர வேண்டும் எனன்பதற்கு 2004 ஆகஸ்ட் 18 ஆம் திகதியிடப்பட்ட 04/0848/004/013-I ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், மேற்படி அமைச்சரவையின் அங்கீகாரத்தின்பிரகாரம் ஒரு கூட்டு முயற்சி பங்குடமையினை நிறுவுவதற்கு பதிலாக ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய தனியார் கம்பனியொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. | கருத்துரை பெறப்படவில்லை | அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் பெரும்பான்மையான உரிமைகள் திறைசேரிக்கு வழங்கப்படுவதுடன் மீதியானது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்படும் என்பதனை உள்ளடக்கியதாக கம்பனியின் அமைப்பு அக விதியினை திருத்தம் செய்வதற்கு 2013 பெப்ரவரி 18 ஆம் திகதியிடப்பட்ட 13/0134/505/004 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும், கம்பனி அமைப்பு அக விதியினை திருத்தியிருக்கவில்லை. | இதனை நடைமுறைப்படுத்த வேண்டியது வரிசை அமைச்சின் பொறுப்பாகும். இது குறித்து, முன்னாள் தலைவர், அமைச்சிடம் தெரிவித்திருந்தும், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் அமைப்பு அக விதியினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்திட்டத்தின் மூலதன வேலைகளில் காலதாமதம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 100,000 KM சாலைத் திட்டத்தின் வேலை கட்டளைகள் தொடர்பாக, 2021 ஆம் ஆண்டில் சாலை கட்டுமானத்திற்கான கம்பனியின் இலக்கு எண்ணிக்கை 1934 ஆகவும், நீளம் 3010.69 KM ஆகவும் இருந்தது. ஆனால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிக்கப்பட்ட சாலைகளின் எண்ணிக்கை 774 ஆகவும் மற்றும் நீளம் 1106.11 KM ஆகவும் இருந்தது. அதன் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த முன்னேற்றம் 40 சதவீதமாக காணப்பட்டது. மேலும் நிறுவனம் எதிர்பார்த்த முன்னேற்றத்தில் இருந்து 50 சதவீத பௌதீக முன்னேற்றத்தைக் கூட அடையத் தவறியிருந்தது. | ஈஸ்டர் தாக்குதல், கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு பின்னர் வெடிக்கும் பொருட்கள் இல்லாத காரணத்தினால் கம்பனியினால் தேவையான முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. | திட்டமிட்ட காலக்கெடுவுக்குள் நிர்மாணப் பணிகளை விரைவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்தும்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சேவை வழங்குநர்களைத் தெரிவு செய்வதில் கம்பனி பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றவில்லை மற்றும் தெரிவு செய்யப்பட்ட சேவை வழங்குநர்களுக்கு சாதகமான பல நிபந்தனைகளை உள்ளடக்கிய விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட சேவை வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதன் பிரகாரம், சேவை வழங்குனர்களை தெரிவு செய்வதில் நிறுவனம் வெளிப்படைத்தன்மையின்றி செயற்பட்டமை அவதானிக்கப்பட்டது. | துணை ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பெறுகை நடைமுறையினை கம்பனி பின்பற்றவில்லை. பதிவுசெய்யப்பட்ட துணை ஒப்பந்தக்காரர்களை மதிப்பிடுவதன் மூலம் துணை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன. | |
| (ஆ) | இலாபத்தின் ஒரு சதவீதம் பொருள் கனிய சிட்டைக்கு மேலதிகமாக வேலையின் துணை ஒப்பந்தத்தின் பெறுமதியில் சேர்க்கப்பட்டது , இது விலைமனுக்களினை கோரி சேவை வழங்குநர்களிடமிருந்து போட்டி விலையைப் பெற்றுக் கொள்ளுவதற்குப் பதிலாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டது. | பொருள் கனிய சிட்டையுடன் ஒரு நிலையான இலாப எல்லை சேர்க்கப்பட்டது. அனைத்து தரப்பினரும் பொருள் கனிய சிட்டையின் பெறுமதிகள் மற்றும் நிலையான இலாப எல்லை சதவீதங்கள் அறிவார்கள். எனவே, நிறுவனம் போட்டி விலைமனு கோரலினை மேற்கொள்ளவில்லை. | பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கம்பனி ஒப்பந்த உடன்படிக்கைகளில் ஈடுபடுவதற்குப் பதிலாக துணை ஒப்பந்தக்காரர்களுடனும் மற்றும் சேவை வழங்குநர்களுடனும் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. | கம்பனி முறையான பெறுகை வழிகாட்டுதல்களைப் பின்பற்றவில்லை. | பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | இதற்கு மேலதிகமாக, பெறுகை வழிகாட்டியின் துணை வெளியீடு 39 இன் பிரிவு 5.3.5 இன் பிரகாரம், ஒரு ஒப்பந்ததாரர் ரூபா. 150 மில்லியன் முதல் ரூபா.300 மில்லியன் வரை ஒப்பந்தத்தை மேற்கொள்ள C3 வகுப்பு நியமத்தையும் ரூபா.50 மில்லியன் முதல் ரூபா. 150 மில்லியன் வரை ஒப்பந்தத்தை மேற்கொள்ள C4 வகுப்பு நியமத்தையும் கொண்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், ரூபா. 150 மில்லியனுக்கும் அதிகமான 2 சந்தர்ப்பங்களும், ரூபா. 50 மில்லியனுக்கும் அதிகமான 6 சந்தர்ப்பங்களும் மாதிரி கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன மற்றும் C7 வகுப்பு நியமத்தையும் கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | உடன்படவில்லை.<br><br>ஒவ்வொரு வகுப்பு நியமத்தினதும் நிதி ரீதியான வரம்பு 26.11.2020 ஆம் திகதியிடப்பட்ட 20/1952/319/018 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்டது. C4 வகுப்பு நியமத்திற்கான உச்ச நிதி ரீதியான வரம்பு ரூபா. 900 மில்லியன் ஆகும் மற்றும் C3 வகுப்பு நியமத்திற்கான உச்ச நிதி ரீதியான வரம்பு ரூபா. 1500 மில்லியன் ஆகும். | பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சேவை வழங்கல் ஒப்பந்தத்தின் பிரிவு எண். 3(உ) இல் செயல்திறன் பாதுகாப்பு பிணையானது மதிப்பிடப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 10 சதவீதமாக இருக்க வேண்டும் என்று கூறிகின்றது , எவ்வாறாயினும், ரூபா. 125,730 மில்லியன் தொகையான 1753 எண்ணிக்கையான வேலைக்கான கட்டளைகளில் ரூபா. 1,113 மில்லியன் தொகையான 145 வேலைக்கான கட்டளைகளுக்கு மாத்திரம் கம்பனியினால் செயல்திறன் பாதுகாப்பு பிணை பெறப்பட்டதை அவதானிக்க முடிந்தது. | கருத்துரை பெறப்படவில்லை | பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் 100,000 KM சாலை திட்டத்தின் நிர்மாண வேலைகளுக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது கம்பனிக்கு ரூபா. 193,518 மில்லியன் தொகையான 2481 எண்ணிக்கையான வேலைக்கான கட்டளைகளை வழங்கியுள்ளது. 2481 கட்டளைகளில் ரூபா. 32,736 மில்லியன் தொகையான 351 வேலைக்கான கட்டளைகள் இரத்து செய்யப்பட்டன மற்றும் ரூபா. 29,130 மில்லியன் தொகையான 306 கட்டளைகளின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. ரூபா. 5,920 மில்லியன் தொகையான 71 கட்டளைகளின் ஒப்பந்தப் வேலைகள் கம்பனியால் நேரடியாகச் செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இது மொத்த வேலைகளுக்கான கட்டளைகளில் 03 சதவீதம் மட்டுமே ஆகும். மீதமுள்ள 1,753 மொத்த கட்டளைகளில் ரூபா. 125,730 மில்லியன் பெறுமதியான 97 சதவீதத்திற்கு சமமானவை வெளி சேவை வழங்குநர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. எனினும் , துணை ஒப்பந்தங்களை வழங்குவது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2008 ஆகஸ்ட் 01 ஆம் திகதியிடப்பட்ட சபைப் பத்திரத்திற்கு முரணானதாக காணப்பட்டது. | இது வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்புடையதாக உள்ளது. | திறந்த போட்டித்தன்மையான விலை மனு கோரல் செயல்முறைக்கு இணங்குவதாக ஒப்பந்தம் வழங்குவது காணப்படல் வேண்டும். |
| (ஆ) | HSR இற்கு 25 சதவவீத இலாப எல்லையினை சேர்ப்பதன் மூலம் தீர்மானிக்கப்படும் ஒப்பந்த பெறுமதி குறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது கம்பனிக்கு வேலைக் கட்டளைகளினை வழங்கியது. கம்பனியின் இயக்குனர் சபை தீர்மானத்தின் பிரகாரம், ஒப்பந்தமானது மொத்த தொகை முறையாக சேவை வழங்குநர்களுக்கு கொடைமனைவ செய்யப்பட்டது மற்றும் சேவை வழங்குநர்கள் வேலைக் கட்டளைகளால் குறிப்பிடப்பட்ட பெறுமதியில் 20 சதவீத இலாப எல்லையினை பெறுகிறார்கள் மற்றும் | கருத்துரை பெறப்படவில்லை | அரசாங்கத்திற்கு உயர்ந்த பலனைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் அரசாங்கத்தின் நிதிகள் வினைத்திறனான மற்றும் விளைதிறனான முறையில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 05 சதவீதம் நிறுவனத்தால் பேணப்பட்டது. அதன்பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளில் தலையிடாமல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் சேவை வழங்குநர்களுக்கும் இடையில் ஒரு இடைத்தரகராக செயல்படுவதன் மூலம் மட்டுமே மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம இந்த கம்பனி ரூபா. 652 மில்லியன் தொகையினை உழைத்திருந்தது. | | |
| (இ) | கம்பனி அதிக எண்ணிக்கையிலான ஒப்பந்தங்களைச் செய்திரந்த போதிலும், ஒப்பந்தப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | உடன்படவில்லை. | கம்பனி ஒப்பந்தப் பதிவேடொன்றினை பேணுதல் வேண்டும். |
| (ஈ) | கம்பனி 2020 ஆம் ஆண்டில் 100,000 KM சாலைத் திட்டத்தின் சாலை நிர்மாண செயல் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கு மாகாண, மாவட்ட மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களை நியமித்துள்ளது மற்றும் கம்பனி 2021 ஆம் ஆண்டில் ஒருங்கிணைப்பாளர்களுக்கான கொடுப்பனவுகளாக ரூபா. 39 மில்லியனைச் கொடுப்பனவு செய்துள்ளது. எவ்வாறாயினும், ஒருங்கிணைப்பாளர்களின் ஆட்சேர்ப்பு தொடர்பான விபரங்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களால் வழங்கப்பட்ட செயல் முன்னேற்ற அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, தகுதியான நபர்கள் முறையான மற்றும் வெளிப்படையான முறையில் பணியமர்த்தப்பட்டார்களா அல்லது வேலையின் செயல் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்து ஒருங்கிணைப்பாளர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டதா என்பதை கணக்காய்வினால் சரிபார்க்க முடியவில்லை. | உடன்படவில்லை.<br><br>உள்ளூராட்சி பிரதிநிதிகளின் அறிவுறுத்தல்களின் பேரில் ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். கம்பனி முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையினை பின்பற்றியது மற்றும் அவர்களின் தகுதிகள் மதிப்பீடு செய்யப்பட்டன. | ஒருங்கிணைப்பாளர்களுக்கு அவர்களின் வேலைகளின் செயல் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்த பின்னரே பணம் செலுத்தப்படல் வேண்டும் மற்றும் தொடர்புடைய விபரங்களை கணக்காய்வுக்கு வழங்கப்படல் வேண்டும். |

**3.5 ஏனைய நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்துதல்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இந்த இணைப்பாளர்களின் பாவனைக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை கம்பனிக்கு 14 வாகனங்களை விடுவித்திருந்தது. எவ்வாறாயினும், இந்த ஒதுக்கப்பட்ட வாகனங்கள் முறையான நடைமுறையில் இடமாற்றம் செய்யப்படவில்லை மற்றும் சாரதிகளின் ஆட்சேர்ப்பு நடைமுறை கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. இந்த வாகனங்களுக்கு மேலும் பதிவு புத்தகங்கள் அல்லது ஓட்டப்பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | உடன்படவில்லை.<br><br>முறையான நடைமுறை மூலம் சாரதிகள் ஆட்சேர்ப்பு செய்யப்படுகிறார்கள் மற்றும் சாரதிகளுக்கு வாகனங்கள் ஒதுக்கப்படுகின்றன. | அரச சொத்துக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் மற்றும் வாகனங்கள் முறையாகப் பராமரிக்கப்படல் வேண்டும். |